**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.47/2016 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | ஜெயந்திமாலா |
| க/பெ. | சம்பத் |
| வயது | 66 |
| விலாசம் | எண்.236, பர்ன் சிட்டி, தொண்டனகுடி, பெங்களூர், கர்நாடாக மாநிலம் |
| தொழில் | |

**முதல் விசாரணை 17.06.2026**

கர்நாடக மாநிலம், பெங்களூர், தொண்டனகுடி, பர்ன் சிட்டி, எண்.236-ல் வசிக்கும் ஜெயந்திமாலா க/பெ.சம்பத், 66 வயதுடைய வாதி ஆகிய நான் இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. 01.04.1981 தேதியிட்ட தனலட்சுமி பெயரிலான கிரய பத்திர ஆவண எண்.1051/1981 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.

2. 14.07.2005 தேதியிட்ட கிரய பத்திர ஆவண எண்.2018/2005 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.

3. 08.08.2014 தேதியிட்ட தனலட்சுமியின் இறப்பு சான்றிதழ் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)